DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, PANRUTI.

CC. No.65 /2023

Deposition of Witness : LW 17/PW12

| | | | |
|---|---|---|---|
| Name | திலகவதி, காவல் ஆய்வாளர் (ஓய்வு) | Taluk | பண்ருட்டி |
| Husband Name | பிரபுசாமுவேல் | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **18.06.2026.** | | | |

(A 1 present. A2 and A3 absent. PFA U/s.317 of Cr.P.C)

**முதல் விசாரணை**

**1)** நான் சென்னை தமிழ்நாடு விரல்ரேகை கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். நான் மேற்படி விரல்ரேகை கூடத்தில் காவல் ஆய்வாளாரக பணிரிந்த போது கடந்த 20.12.2012 அன்று சமூகம் நீதிமன்றத்தால் இவ்வழக்கு சம்மந்தப்பட்ட காடாம்புலியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1212/2010ல் பதியப்பட்ட தான சென்டில்மண்ட் பத்திர அசல் ஆவண எண்.2969/2011ல் பதியப்பட்ட தானசென்டில்மண்ட ரத்து அசல் பத்திரத்திலிருந்து சேகரிக்கப்பட்ட இடது கை பெருவிரல் ரேகைகளை D1, D2, D3, D4 என அடையாளம் கொடுத்தும் அதில் D1ஐ தேர்ந்தெடுத்தும், பாலு என்பவரிடமிருந்து சேகரிக்கப்பட்ட இடதுகை பெருவிரல் ரேகை பதிவை S என்று அடையாளம் கொடுத்தும் ஆய்வு மேற்கொண்டேன். ஆய்வில் D1 மற்றும் S ஆகிய ஆவணங்களில் காணப்படும் விரல் ரேகை ஒரே நபரிருடையது என்றும், அது பாலுவின் விரல்ரேகை என்றும் சான்று அளித்தேன்.

2) தற்போது என்னிடம் காட்டப்படும் எதிரி பாலுவின் கைரேகை ஒப்பீடு அறிக்கை தான் மேற்படி நான் வழங்கிய சான்று ஆகும். அதிலுள்ள திலகவதி என்கின்ற கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி சான்று அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** D1, D2, D3, D4 ஒன்றொன்று ஒத்துபோகிறது. அது ஒரே நபருடையது. அதனால் நான் ஒரே D1ஐ தேர்ந்தெடுத்து Sஓடு ஒப்பீட்டு கூறுயாவ்வு செய்து மேற்படி அ.சா.ஆ.12 சான்று வழங்கினேன். மேற்படி கேள்விக்குரிய D1யும் ஒப்புக்கொண்டுள்ள ஆவணத்திலுள்ள Sயும் கூறுயாய்வு செய்யும் போது D1ல் உள்ள

ரேகை கூறுகள் Sல் உள்ள கூறுயாய்வுகோளடு தொடர்ச்சியாக ஒன்றொன்று ஒத்துள்ளது. எனவே கேள்விக்குரிய D1, D2, D3, D4 S என்று குறியீடு செய்த G.பாலு என்பவருடையது என்பதை உறுதி செய்தேன். நீதிமன்றத்திற்கு விளக்கும் பொருட்டு ஒத்துப்போகின்ற 8 விரல்ரேகை கூறுகளை சிவப்பு மையிட்டு விளக்கியுள்ளேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) எதன் அடிப்படையில் நான் கைரேகையினை ஆய்வு செய்தேன் என்றால் எனது மேலதிகாரி எனக்கு பிறப்பித்த உத்தரவின் மூலம் நான் கைரேகை ஆய்வு செய்தேன். நான் இந்த வழக்கில் உள்ள கைரேகையை நேரடியாக சென்று எடுத்தேனா என்றால் நான் நேரடியாக சென்று எடுக்கவில்லை நீதிமன்றத்தின் மூலம் முறையாக எடுக்கப்பட்ட கைரேகையை நான் ஒத்து உள்ளதா என்று ஆய்வு மட்டும் தான் செய்தேன். வேறு ஒரு நபர் எடுத்துக் கொடுத்த கைரேகை தான் நாங்கள் ஆய்வு செய்தோம் என்றால் சரிதான். வேறு ஒரு நபர் எடுத்துக் கொடுத்த கைரேகையாக இருந்தாலும் நீதிமன்றத்தின் மூலம் முத்திரை பதிக்கப்பட்டு சீல்டு கவரில் வந்த கைரேகை மட்டும் தான் நாங்கள் ஆய்வு செய்வோம். ஒரே நாளில் இந்த கைரேகை தவிர்த்து வேறு கைரேகையும் நான் ஆய்வு செய்தேன் என்றால் ஒரு வாரத்திற்கு ஒரே ஒரு கைரேகை மட்டும் தான் ஆய்வு செய்ய எங்களுக்கு ஒதுக்கப்படும் மேலும் வேறு கைரேகையும் ஆய்வு செய்திருக்க வாய்ப்பு உள்ளது. கைரேகையை நான் ஆய்வு செய்யும் போது என்னை புகைப்படம் எடுக்கும் வழக்கம் உள்ளதா என்றால் இல்லை.

2) பேப்பரில் வைக்கப்படும் கைரேகை எத்தனை வருடத்திற்கு மறையாமல் இருக்கும் என்றால் அந்த பேப்பர் அழியும் வரை அதுவும் மறையாமல் இருக்கும். பொதுவாக அரசாங்கத்தில் கைரேகை எடுக்க பயன்படுத்தப்படும் பொருட்களில் என்ன திரவம் இருக்கும் என்றால் கருப்பு மை தான் இருக்கும். மேற்படி கைரேகை ஆய்வு செய்யப்பட்ட எட்டு ரேகை கூறுகள் எதிரி பாலுவின் கைரேகை கூறுகளை போன்று தான் உள்ளது என்று எதன் அடிப்படையில் நான் சான்று அளித்தேன் என்றால் Specimen கொடுக்கப்பட்டிருந்த கைரேகையின் இடது கை பெரு விரலை கைரேகையை பெருசு படுத்தினோம் மேலும் முரண்பட்ட ஆவணமாக சொல்லப்படும் D1, D2, D3, D4 ஆகிய ஆவணங்களில் உள்ள கைரேகையும் பெரிதுபடுத்தி அதன் அடிப்படையில் ஒத்து அமைந்துள்ள கூறுகளை பரிசீலனை செய்தோம் அதன் பின்னிட்டு தான் அதில் எட்டு ரேகை கூறுகள் ஒத்துள்ளது என்ற சான்றினை நான் அளித்தேன். எனக்கு மாதிரியாக கொடுக்கப்பட்ட கைரேகையில் எத்தனை கை ரேகைகள் வைக்கப்பட்டிருந்தது என்றால் பத்து விரல்களை கொண்ட கைரேகை வைக்கப்பட்ட ஒரு சீட் கொடுக்கப்பட்டது மேலும் 12

இடது கை பெரு விரல் ரேகை வைக்கப்பட்ட ஒரு சீட் வழங்கப்பட்டது. எட்டு ரேகை கூறுகள் இருந்ததாக எனது மேலதிகாரி வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில் தான் நான் தவறுதலாக கருத்துரையை வழங்கினேன் என்றால் சரியல்ல.

Taken down before/by me in open court Readover interpreted to the witness and acknowledged by him to be correct.

Judicial Magistrate No.II,
Panruti.